# திலீபனின் கனவை நனவாக்கிவிட்டோம்
# விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை

பக்கங்கள் நான்கு · விலை ரூபா:- 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 226 வியாழன் 27-09-1990 (புரட்டாதி 11) ற. அவ்வல் 07

370 வருடங்களுக்கு மேலாக தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நின்ற ஆக்கிரமிப்புச் சின்னங்களின் ஒன்றான யாழ். கோட்டை நேற்று அதிகாலை எம்மால் கைப்பற்றப்பட்டு விட்டது. இக்கோட்டை ஆக்கிரமிப்பாளர்களின் இருப்பிடம் ஆக்கிரமிப்பின் சின்னம். என்ன விலை கொடுத்தேனும் இதைக் கைப்பற்றியே தீருவோம் என்ற எமது உறுதியை இன்று நிறைவேற்றிவிட்டோம். இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இராணுவ வெற்றியானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றிப்பாதையில் ஒரு வரலாற்றுத் திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளது. நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் யாழ். கோட்டை முகாம் மீது உக்கிர தாக்குதல் தொடுக்கப்பட்டது. சுமார் இரண்டரை மணிநேரத் தாக்குதலைத் தொடர்ந்து கோட்டையின் தென்புறப் பகுதியிலிருந்து சிறுகடல் —04 ஆம் பக்கம் பார்க்க

# 370 வருடங்களின் பின்னர்
# கோட்டை தமிழர் வசமானது

## நேற்றுப் பகல் 10.48க்கு புலிகளின் கொடி ஏறியது

**சரித்திரப்பழமை வாய்ந்த யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் கோட்டை நேற்றுப் பகல் 10.48 மணிக்கு விடுதலைப் புலிகளின் வசம் வந்துள்ளது.**

நேற்று முன்திலம் இரவு விடுதலைப்புலிகளால் கோட்டை மீது மேற்கொள்ளப்பட்ட கடும் தாக்குதலை அடுத்து அங்கிருந்து படையினர் அதிகாலை நேரம் வெளியேறி மண்டைதீவிற்குச் சென்றனர்.

இராணுவம் வெளியேறியதையடுத்து விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி பானு மூன்று வருடங்களின் முன் தியாகி திலீபன் உயிர் பிரிந்த நேரமான பகல் 10.48 க்கு புலிக் கொடியை கோட்டை நுழைவாயிலிலும் கோட்டையின் உள்ளே இருக்கும் மரம் ஒன்றிலும்ஏற்றிவைத்தார். 'இந்த மண் எங்கள் சொந்த மண் எங்களை மீறி யார் வந்தது' என்ற பாடல் இசைக்கப்பட கொடியேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாலையில் மக்கள் கே. கே. எஸ். வீதியில் லேடன்நிறுவனம் —04ஆம் பக்கம் பார்க்க

## இறுதித் தாக்குதல்

நேற்று முன்தினம் நள்ளிரவளவில் கோட்டையை மீட்பதற்கான இறுதிமுயற்சிகளை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட போது இரு தரப்பினருக்கும் இடையே கடும் மோதல் உருவானது.

மண்டைதீவில் இருந்து, கோட்டையில் உள்ள ராணுவத்தினருக்கு உதவியளிக்கு முகமாக ராணுவம் முன்னேற முயன்றபோது இவர்களை நோக்கிப் புலிகள் கடும் தாக்குதலை ஆரம்பித்தனர். அதே வேளை கோட்டையை நோக்கியும் புலிகள் கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து —04ஆம் பச்கம் பார்க்க

## ராணுவம் வெளியேறி ஓடியது

கோட்டை கைப்பற்றப்பட்ட சரித்திரப் பெருமை மிக்க நிகழ்ச்சி பற்றி விடுதலைப் புலிகள் இன்று தமிழீழ மக்களுக்கு துண்டுப் பிரசுரம் மூலம் பகிரங்கப்படுத்தினர்.

''கோட்டை அதிர்ந்தது, கொடியவர் பாசறை எரிந்தது. வாட்டிய துன்பங்கள் யாவும் முடிந்தது, வாசலில் புலிக்கொடி பறக்குது ''என்று தலைப்பிட்ட இப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ;—

அன்பார்ந்த தமிழ் ஈழ மக்களே!

தியாகி திலீபனின் மூன்றாவது நினைவு நாளான இன்று —04 ஆம் பக்கம் பார்க்க

## ஆயுதங்களும் மீட்பு

நேற்றுக் கோட்டையில் நடந்த இறுதித்தாக்குதலின் போது மேலும் சில ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டுள்ளது.

ஆர். பி. ஜி-1, அதற்குரிய ஷெல்-4, ஏ.கே.எல்.எம் ஜி-1, [illegible]6-2, ரி-81-1, 40 எம். எம். டொங்கான்-1, ரம் ம[illegible]சின்-1, வெடிக்கவைக்கும் கருவி-2, ரவைக் கூடு - 7, கைக்குண்டு-2 ஆகிய ஆயுதங்களே மீட்கப்பட்டவையாகும்.

## 3 போராளிகள் வீரமரணம்

நேற்றைய கோட்டைத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரமரணமடைந்தனர்.

பெண் புலி 2-ஆம் லெப்ரினன்ட் சிசிலியா (யூடியா பகீரதகுமார், மன்னார்), லெப்டினன்ட் நகுலன்(இராசதுரை நேசன் வத்திரையான் வடக்கு வடமராட்சி), ரகு (இராசலிங்கம் ரொபேட் சாந்தகுமார் கட்டுடை, மானிப்பாய்)

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர். து

## கிழக்கில் அதிகரிக்கும் படுகொலைச் சம்பவங்கள்

கடந்த செவ்வாயன்று அக்கரைப்பற்றை சுற்றிவளைத்த ராணுவம் எட்டுத் தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்தனர். இவர்களைக்கைதுசெய்து கொண்டு செல்லும் வழியில் நான்கு இளைஞர்களை ராணுவம் வெட்டிக் கொன்று அருகிலுள்ள நீர்த் தேக்கத்தினுள் போட்டுச் சென்றனர்.

ஏனைய நான்கு பேரையும் ராணுவம் முகாம் கொண்டு சென்றது, இவர்களுக்கு என்ன நிகழ்ந்தது என்பது பற்றி எதுவும் தெரியவில்லை. து

## இரவு நேர ஷெல் தாக்கு

நேற்று முன்தினம் இரவு மண்டைதீவில் இருந்து யாழ். நகரப் பகுதியை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது இதில் யாழ். பெரியகோவில், சென்பற்றிக்ஸ் கல்லூரி உட்பட அப்பகுதியில் உள்ள பல வீடுகள் சேதமடைந்தன.

நகரில் வின்சர்தியேட்டர், ராணிதியேட்டர், நீதிமன்றம், —04ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவு இராணுவம் வெளியேறுகிறது

மண்டைதீவில் தங்கியிருந்த ராணுவத்தினரும் வாபஸ் பெறத் தொடங்கியுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இந்த ராணுவத்தினரைப் பலாலி முகாமிற்கு அழைத்துச் செல்வதில் ஹெலிகள் மும்முரமாக நேற்று ஈடுபட்டிருந்தமையையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. து

## மக்கள் ஆனந்த ஆரவாரம்

கோட்டை கைப்பற்றப்பட்ட செய்தி குடாநாடு எங்கும் காட்டுத் தீ போல் பரவியது.

மக்கள் எங்கும் வெடிகள் கொளுத்தி ஆடிப்பாடிமகிழ்ச்சி ஆரவாரம் செய்ததாக எமது நிருபர்கள் தெரிவிக்கின்றனர். 73 ரூ

## முத்திரைச்சந்தியில் பொம்மர் தாக்கு

முத்திரைச்சந்தியில் நேற்றுக்காலையும் பொம்மர் தாக்குதல் நடாத்தப்பட்டது. எஸ். மங்களேஸ்வரியின் வீடு தரைமட்டமானது. வீதியால் சென்ற இருவர் காயமடைந்தனர். (66 70 ரூ)

## வெடிக்காத குண்டு மீட்கப்பட்டது

நேற்று முன்தினம் நள்ளிரவு அவ்ரோ விமானத்தால் வீசப்பட்ட பீப்பாக் குண்டு ஒன்று மானிப்பாய்] பட்டினசபை ஒழுங்கையில் உள்ள நா. தவரத்தினம் என்பவரின் வீட்டு —04ஆம் பக்கம் பார்க்க

## ராணுவம் அனுப்பிய வாகனங்கள் புலிகளால் திருப்பி அனுப்பப்பட்டன

வவுனியாவில்- தாண்டிக்குளம் விவசாய பண்ணை யாழ். வீதியைப்பயன்படுத்தக் கூடாது என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இராணுவம் இவ் வீதியால் வாகனங்களை அனுப்பமுயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

சில தினங்களுக்கு முன்பு வவுனியா நகரிலிருந்து ஒரு தொகுதி வாகனங்களை கட்டாயப்படுத்தி இவ் வீதியால் ...04 ஆம் பக்கம் பார்க்க

# யாழ். கோட்டை காலக் கண்ணோட்டம்

## யாழ். கோட்டை அமைப்பு

1625-ம் ஆண்டு பெப்ரவரி பிலிப் தே ஒலிவேறா என்ற போர்த்துக்கேயத் தளபதி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை அடி அத்திவாரத்தோடு கிளறி அக் கோயிலின் கற்குவைகளைப் பயன்படுத்தி யாழ்ப்பாணக் கோட்டையைக் கட்டி முடிததான்.

1629-ம் ஆண்டு சிங்களப்படைகள் இக் கோட்டையை 13 நாட்களுக்கு முற்றுகையிட்டனர். இம் முற்றுகை தோல்வி கண்டது. இதுவே கோட்டையில் முதல் முற்றுகையாகும்

1658-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் திகதியில் இருந்து யூன் மாதம் 21-ம் திகதிவரை ஒல்லாந்தர் போர்த்துக்கேயர் வசமிருந்த கோட்டையை முற்றுகையிட்டனர். இந்த 107 நாள் முற்றுகையின் பின் போர்த்துக்கேயர் சரணடைந்தனர். இது கோட்டையின் இரண்டாவது முற்றுகை.

1695-ம் ஆண்டு ஒல்லாந்தரினால் யாழ்ப்பாணக் கோட்டை புதுப்பித்துக் கட்டப்பட்டது ஒல்லாந்தரால் தென்கிழக்காசியாவில் கட்டப்பட்ட கோட்டைகளில் பெரியதும் பலமானதும் யாழ். — 04 ஆம் பக்கம் பார்க்க

## கோப்பாயில் 'யுத்த யாத்திரை'

அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் தியாகி திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு, பறைமேள சகிதம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

கோப்பாயில் இவ்வூர்வலம் நடைபெற்றது. கோப்பாயில் ஒவ்வொரு குக் கிராம சனசமூக நிலைய முன்றலுக்கும் இவ் இரதம் சென்றடைந்ததும் அவற்றின் முன்றலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பிரிவினரின் 'யுத்த யாத்திரை' என்னும் தெருக்கூத்து நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இவ்வூர்வலத்தின்போது மக்கள் வீதிகளில் நிறைகுடம் வைத்து மலர்மாலை அணிவித்தும், புஷ்பாஞ்சலி செலுத்தியும் தமது அஞ்சலியைத் தெரிவித்தனர்.

வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்றலில் வைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்த பந்தலில் காணப்பட்ட மணவறையில் தியாகி திலீபனின் திருவுருவப் படத்தைப் பார்த்த வண்ணம் காந்தியடிகள் இருப்பது போன்று அவரது சிலையும் வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையத்தில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதமும் நடைபெற்றது. (23 கி)

## பளை கொத்தணி ஆசிரியர்கள் கூட்டம்

பளைக் கொத்தணிப் பாடசாலைகளின் அனைத்துமாணவர்களின் கல்வி முன்னேற்றம் பற்றியகருத்தரங்குஇன்று 27ந் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பளை மகா வித்தியாலயத்தில் பிரதேசப் பொறுப்பாளர் வ. செல்வராசா தலைமையில் நடைறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 71கி

## தெங்குப் பாணி உற்பத்தி

அரியாலைத் தொழிற்சாலையில் தெங்குப் பதநீரில் இருந்து பாணி காய்ச்சும் வேலை நடைபெற்று வருகிறது. இத் தொழிற்சாலை இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து இயங்கிவருகிறது.

ஆறு போத்தல் பதநீரில் இருந்து ஒரு போத்தல் பாணி காய்ச்சிப் பெறப்படுவதாகவும், தினமும் எண்பது போத்தல் பதநீர் கொள்வனவு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தரமான இப்பாணி ஆறு மாதங்கள் வரை பழுதுபடாமல் இருக்கும். 17கி

## மழையினால் அகதிகள் சிரமம்

அரியாலை கிழக்கில் உள்ள அகதிகள் மழைக்காலம் தொடங்கி இருப்பதால் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

பூம்புகாரில் இருந்து தலைமுனைவரை அகதிகள் மர நிழல்களிலும், சிறுசிறு கொட்டில்களிலும் தங்கியுள்ளார்கள். குருநகர், பாஷையூர் பகுதிகளைச் சேர்ந்தோர் இங்கு பெருமளவில் தங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 17கி

## மருந்து இல்லை நோயாளர் அவதி

மல்லாவி ஒட்டுசுட்டான் நட்டாங் கண்டல், நெடுங்கேணி வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது.

நீண்ட நாட்களாக மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதால் அவ்வப் பகுதி மக்கள் மற்றும் அகதிகள் தமது நோயைக் குணப்படுத்த முடியாது அவஸ்தைப்படுகின்றனர்.

சாதாரண தலையிடிக்குக்கூட மருந்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை இங்கு காணப்படுகின்றது. (38கி)

## சம்பளம் வழங்க 22 லட்சம் தேவை

லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகஸ்தர்கள் ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுக்கு 22 லட்சம் ரூபா தேவை என யாழ். அரச அதிபரிடம் கூட்டுத்தாபன முகாமையாளர் கேட்டுள்ளார்.

காங்கேசன் துறையில் இயங்கும் மேற்படி கூட்டுத்தாபனம் கடந்த மே மாதம் 19-ந் திகதியில்இருந்து செயற்படாதிருப்பதாலும், சீமெந்து விற்பனை மூலம் கிடைக்கும் பணம் கிடைக்காமையினாலும், வங்கிகள் இயங்காததினாலும் சம்பளக் கொடுப்பனவு செய்யமுடியாமல் இருப்பதாகக் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

இதனால் இக்கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 1850க்கு மேற்பட்டோர் பாதிப்படைந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. (66கி)

## பதிவுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன

பருத்தித்துறை அரசினர்வைத்தியசாலைப் பிறப்பு இறப்பு பதிவாளருக்குப் பதிவுப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன

மாவட்டப் பதிவகம் இப் புத்தகங்களை வழங்கின. புத்தகங்கள் வழங்கப்படாமையினால் பெற்றோர் பால்மாவைக்கற்றுக்களைப் பெறுவதில் கஷ்டப்படுகிறார்கள் என முரசொலியில் செய்தி வெளிவந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. 17கி

## விஷக்கடி நிலையம் இடமாற்றம்

விஷவைத்திய நிபுணர் டாக்டர் க. சிற்றம்பலத்தினால் கொட்டடி, வேலணை பகுதிகளில் நடாத்தப்பட்டு வந்த இலவச விஷக்கடி வைத்திய நிலையம் தற்பொழு[illegible]டுவில் மானிப்[illegible] வீதியிலுள்ள 1-ம் கட்டைக்கு இடமாற்றப்பட்டு செயற்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-27 கி)

## இருள் சூழ்ந்த நிலையில்...

புதிதாகக் கட்டப்பட்டுபுனருத்தாரணம் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்ற மண்கும்பான் பிள்ளையார் கோவில் தற்போது பூசைகள் எதுவுமின்றி இருண்டு கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கோவிலின் வெளி மண்டபம், உள் மண்டபம் உட்பட கோவிலின் பல கட்டிடங்கள் அண்மையில் மண்டைதீவை நோக்கி இராணுவம் சென்றுகொண்டிருந்த போது பொம்மர் தாக்குதலினால் பெரும் சேதத்துக்குள்ளாகி இடிந்து விழுந்துள்ளன. கோவிலுக்குள் இருந்த பல பெறுமதியான பொருட்களும் சேதத்துக்குள்ளாகியுள்ளன.

இலட்சக்கணக்கான ரூபா சேதம் விளைந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

இதேபோன்ற நிலையே அல்லைப்பிட்டி கறுப்பாசி அம்மன் கோவிலுக்கும் இடம் பெற்றிருக்கிறது.

வெளி கொண்ட இடங்களில் அமைந்துள்ள இந்த இரண்டு இந்துக்கோவில்களும் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வக் கோவில்கள் என சகலரினாலும் வணங்கப்பட்ட ஸ்தலங்களாகும். (53ஸ்ரீ)

## 'தமிழ்த்தாய்' நூலகம்

கல்வியங்காட்டில் அமைந்துள்ள ஆலால சுந்தரம் மண்டபத்தில் கடந்த 14-ம் திகதி தமிழ்தாய் மன்றத்தினரால் நூலகம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. நூலகத்தை கே.கிட்ணர் திறந்து வைத்தார். (கி)

★ உலுத்தர்களை உலுக்கி தன்மானத்தமிழர் உளமதில்

# உணர்ச்சித்தீ மூட்டிய நான்கெழுத்து நாயகன்

(கே. வி. ஆர். ஸ்ரீ)

திலீபன்... இத் திவ்வியநாமத்துக்குஉரியவன்... காட்டாற்று வெள்ளம்போல் விரைந்து கொண்டிருக்கின்ற காலவெள்ளத்தில் அடித்துச் செல்லப்படக்கூடிய ஓர் சாமான்யன் அல்லன்.

உலகின் பலபாகங்களிலும் நிகழ்ந்த போராட்ட வரலாறுகளினின்றும் ஒருவகையில் மகத்தான மாறுதல் பெற்று பெருமைக்குரியவன் தீந்தமிழன் திலீபன்.

வரலாற்று நூல்களிலே நாம் படித்த கீர்த்திக்குரிய போராட்டத் தன்மைகளை நிதர்சனமாக எம்முன் நிலைநிறுத்தியவன் அவன்.

அன்னை பூமியின் அடிமைத் தளையைத் தகர்த்தெறிந்து சுதந்திர பூமி தோற்றுவிக்கும் தூய பணிதனில் திரத்துடன் போராடிய பெருமைக்குரியவர்கள் வெளிநாடுகளில் குறிப்பாக பாரதத்தில் மாத்திரமல்லாது எம் ஈழத் திருமண்ணிலும் ஜனனித்து சரித்திரம் படைத்துள்ளார்கள், படைக்கிறார்கள், படைக்கப் போகிறார்கள் என்பது எவராலும் மறைத்திட இயலாப் பேருண்மை.

இத்தகைய முன்னோடி வீரர்களில் அதிமுக்கிய ஸ்தானம் தியாகி திலீபனுக்கு உரியது.

வெறும் சுகபோக வாழ்வுக்காக தன் நாட்களை வெறுமனே கழிக்காது என் நாடு, என் மக்கள், என் தமிழ் என்பவற்றைத் தாரகமந்திரமாகக் கொண்டு வாழ்ந்து வரலாற்று நாயகனாகத் திகழ்பவன் தியாகி திலீபன். அட்டூழியம் புரிந்த அரச படைகளுடன் பொருதி அவர்களை விரட்டியடித்து வீரத்தழும்பு பெற்றவன்.

முகிழ்த்தெழும் தமிழினத்தின் முழுமதியாக, அடக்கி ஒடுக்கப்பட்டு உரிமை மறுக்கப்பட்டு மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதில் ஆர்த்தெழும் ஆழியாக, செல்லரித்துப்போன சமுதாயத்தில் உலவும் உலுத்தர்களை, உன்மத்தர்களை, குள்ள நரிகளை சிறுமதியாளரை குலைநடுங்கச் செய்திடும் வீர வேங்கையாக, அஞ்சா நெஞ்சினனாகச் செயற்பட்டவன் இத்திருநாட்டின் அசல்வித்தான திலீபன்.

திக்கெட்டும் தியாகி திலீபனின் திருநாமம் புகழ் பரப்பி நிற்கிறது, இன்று அவன் நாமம் உச்சரிக்காத நாவில்லை எனும் அளவிற்கு அவன் கீர்த்தி, மகாத்மியம் வியாபித்து நிற்கிறது. காலத்தை வென்று அவன் புகழ் நிலைப்பது சர்வ நிச்சயம்.

வீரத்தை மாத்திரம் விளம்பி நிற்காது தமிழினத்தின் பொருளாதார சுபீட்சம், கல்வி அபிவிருத்தி மற்றும் இன்னோரன்ன தேவைகளையும் ஆத்மார்த்த ரீதியாக, தீர்க்க தரிசனத்துடன் உணர்ந்து செற்பட்டவன் தியாகி திலீபன்.

ஈழத்திருமண்ணின் பேரெழுச்சிமிக்கதோர் வரலாற்றில் நிலைத்து நிற்கும் அவன்... அன்புள்ளவன் ஆற்றலுள்ளவன், இன்பமுள்ளவன், ஈகையுள்ளவன், உண்மையுள்ளவன். ஊக்கமுள்ளவன், எழிலுள்ளவன், ஏற்றமுள்ளவன், ஐயமின்மையுள்ளவன், ஒழுக்கமுள்ளவன், ஓம்பலுள்ளவன்.

இத்தகைய மாண்புக்களுக்கெல்லாம் பாத்திரமான அத்தியாகி குறித்து தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறிய சில கருத்துக்களை இத்தருணம் இங்கே நினைவிற்கொள்ளுதல் சாலப் பொருத்தமே.

### இலட்சிய நெருப்பு

''அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்றுநிகழ்ச்சி. தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. பாரத நாட்டைத் தலைகுனிய வைத்த நிகழ்ச்சி உலகத்தின் மனச்சாட்சியைச் சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

ஓர் உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.

திலீபனை நான் ஒரு சாதாரண மனிதப்பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். அதில் நான் பெருமை கொண்டேன் இப்படிக் கூறினார் தலைவர் பிரபாகரன்.

''மண்மீது மானம் ஒன்றே பிரதானம் என்றெண்ணும் குணம் வேண்டும். அதை மறந்தாலே வாழ்வில் கிடைக்கும் சன்மானம் மாறாத அவமானம்'' என்று தன்மானத் தமிழன் ஒவ்வொருவரினதும் இதயத்தின் அடித்தளத்தில் உணர்ச்சியை அக்னியாக உருவாக்கிய அந்த உத்தமன் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழக்கிடைத்துள்ளதான வாய்ப்பு நமக்கெல்லாம் ஈடிணையிலாப் பெருமை தருவதன்றோ!

படகில் செல்கையில் விளைந்த விபரீதம்

## யாழ்ப்பாணத்தில் பெற்றோர்; தமிழகத்தில் மகள்

வடமராட்சிக் கடல் பகுதியிலிருந்து சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்தியாவுக்குப் புறப்பட்ட நான்கு படகுகள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கடலில் வைத்துப் பிடிக்கப்பட்டு கடற்படையினரின் படகினால் கட்டி இழுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

நான்கு படகுகளும் ஒன்றின் பின் ஒன்றாகக் கட்டப்பட்டு கடற்படைப் படகினால் இழுத்துச் செல்லப்பட்டபோது கடைசியாகச் சென்ற படகு இருட்டில் கடற்படைக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு கட்டை வெட்டிக் கொண்டு இந்தியாவுக்கு விரைந்து சென்று விட்டதாம்.

ஏனைய மூன்று படகிலும் சென்றவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

திருப்பி விடப்பட்ட படகு ஒன்றில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த தாயும், தந்தையும்! இந்தியாவுக்குச் சென்றுவிட்ட அந்தப் படகில் அவர்களின் மகளும் இருந்துள்ளார்கள்.

தாயும், தந்தையும் யாழ்ப்பாணத்திலும், மகள் தமிழ் நாட்டிலும் இப்பொழுது உள்ளார்கள். (53 ஸ்ரீ)

## இக்கடிதங்கள் உங்களுடையதா?

வேலணை:- அப்பையா தங்கம்மா மண்கும்பான் மேற்கு, என். இன்பநாயகம் வேலணை கிழக்கு, ஜே. புனிதசீலி சரவணை கிழக்கு.

ஊர்காவற்றுறை;- றோஸ்மலர்பிலிப்பையாரிஜினாபவளம்

நெடுந்தீவு:- எம். மரியநாயகம் 6-ம் வட்டாரம்.

புங்குடுதீவு:- எம். யேசுரட்ணம் 12-ம் வட்டாரம், எஸ். கமலதேவி 2-ம் வட்டாரம்.

அனலைதீவு:- கோ. யோகநிதி, 5-ம் வட்டாரம்,

காரைநகர்:- எஸ்.பி. ஆறுமுகம், களபூமி,

இயக்கச்சி:- கே. சகுந்தலா தேவி, சங்கதர் வயல்,

கிளிநொச்சி:- கே ஆறுமுகதாஸ், டி.04, கிளிநொச்சி, கே. கந்தசாமி, இல.9 டியோ, அனுதினபுரம், என். தயாபரராசா, கஸந்தபுரம், என். ஜெயநந்தன், திருவையாறு, என். அரவிந்தன், திருவையாறு, எம். கண்மணி, ஞானேஸ்புரம்,

பரந்தன் :- எஸ். கண்மணி, குமரபுரம்.

விஸ்வமடு :- ஆர்.ஜெயந்தி, வேலுவர்புரம்.

வவுனியா:- கே. சுப்ரமணியம், புகையிரத நிலையம், வவுனியா, வீரசிங்கம் வினோதினி, அரசினர் தமிழ்பாடசாலை.

நெடுங்கேணி :- சி. சிறீதேவி, பளம்பாசி.

பூநகரி :- எஸ். நடராசா, ராமலிங்கம் றோட்' ஆர்.நவரட்ணம். பல்லவராயன்கட்டு.

முல்லைத்தீவு :- எஸ். பத்மஜோதி, களவிபடு

சித்தங்கேணி:- எஸ். சாம்பசிவம், வட்டு. கிழக்கு, என். விவேகானந்தன், வட்டு. கிழக்கு, கே. எஸ். பவான், வட்டு. கிழக்கு.

பண்டத்தரிப்பு :- வி. கந்தையா கலையடி தெற்கு, ஜே. ஜெயபாலசிங்கம் ஆஸ்பத்திரிவீதி, சங்கானை மேற்கு, எஸ். மரியநாயகி பத்திமாகிரி,

சுழிபுரம் :- ஆர். சுப்ரமணியம் பண்ணாகம் தெற்கு, ரி. செல்லத்துரை சுழிபுரம் வடக்கு, இ. ஆறுமுகம் பண்ணாகம், பி. சுகுமார் வீரபத்திரகோயிலடி சுழிபுரம்கிழக்கு,

புலோலி :- புஸ்பலீலா நவரட்ணம் முல்லையன் தோட்டம் புலோலி தெற்கு, வி. பாக்கியநாதன் கல்லடி வளவு புலோலி தெற்கு,

கரவெட்டி :- ரி. வேலாயுதம் ஆனைப்பந்தி கரவெட்டி, எஸ். சண்முகம் புறாப்பொறுக்கி ஆலடி, கம்ணவாய் மேற்கு, இ. இரரசம்மா பராசக்தி அம்மன் கரணவாய் வடக்கு, எஸ். குலேந்திரன் சோளன் கண், கரணவாய் தெற்கு, (தொடரும்)


## சிறுவிளம்பரம்

### புத்தகம்

தாவர போசன சமையல் புஷ்பாஞ்ஜலி முருகேசபிள்ளை எழுதிய சிறந்த சமையல் நூல், விலை ரூபா 150/- விற்பனையாளர்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். 09032

# முரசொலி

எ ம து சி ந் த னை

1990 - 09 - 27 வியாழன்


''ஓர் உணவுப்பயிர் வளர்ந்த இடத்தில், இரண்டு பயிர் கதிர் ஈனச் செய்யும் ஒருவன் முழு மனித இனத்தின் நன்றிக்கும் உரியவன். அரசியல்வாதிகள் எல்லோரும் சேர்ந்து செய்யும் சேவையை விட, அவன் தன் நாட்டுக்குச் செய்யும் சேவை அதிகம்''

— ஜொனதன் ஸ்விப்ற்

## உழவர்க்கு உதவுவோம்!

தமிழர் பொருளாதாரம் ஒரு மணியோடர்ப் பொருளாதாரம் என்று சொல்லப்படுவதுண்டு, ஒரு காலத்தில் அரசாங்க சேவையில் பெருவாரியான தமிழர்கள் இருந்ததால் அவர்கள் குடும்பங்கள் தெற்கேயிருந்து வரும் காசுக்கட்டளைகளை எதிர்பார்த்திருந்தன.

உத்தியோகம் பார்க்கும் தமிழர் தொகை பெருமளவு குறைந்துவிட்ட இந்நாளில், வெளிநாடுகளில் இருந்துவரும்Mail transferஐக் காத்திருப்போர்தொகை கணிசமானது. அதாவது, எமது பொருளாதார அடிப்படை இன்னமும் மாறவில்லை.

இந்தப் போக்கின் விளைவு என்ன?

விவசாயமும் தொழிற்துறைகளும் பேணுவார் அற்றுப் பெரிதும் பின்தங்கின. கிழக்கிலங்கை இதற்குப் புறனடை. தானியக்களஞ்சியமாக விளங்கும் அப்பகுதியில் அரசாங்க சேவையை நம்பியிருப்போர் தொகை மிகக்குறைவு என்பதைக் கவனிக்க வேண்டும்.

எழுபதுகளின் முற்பாதியில் விவசாயிகளுக்குக் கிடைத்த பேருக்கம் தந்த சுபீட்சம் ஐ. தே. கட்சியின் திறந்த பொருளாதாரக் கொள்கையால் அடிபட்டுப் போயிற்று!

குடாநாட்டு விவசாயிகள் காசுப் பயிர்களான புகையிலையையும் வெங்காயத்தையும் மலைபோல நம்பி வந்துள்ளனர். இதனால் பாரம்பரியமாக இப்பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்டு வந்த குரக்கன், சாமை, வரகு, பயறு முதலியன கைவிடப்பட்டன. இது தற்கொலைக்கொப்பான போக்கு என்பதைத் தற்போதைய போர் எமக்கு உணர்த்தியுள்ளது. வெங்காயமும் பீற்றூட்டும் தேடுவாரற்று மலிய, அரிசியும் மாவும் ஆனைவிலை குதிரைவிலை விற்றன.

உணவுப் பொருள்கள் மேலும் விலையேறாது தடுக்க, தெற்கேயிருந்து கப்பல் வரவேண்டி இருந்தது.

அதாவது, மீண்டும் தெற்கு நோக்கும் பொருளாதாரம்.

இந்நிலையில்தான், விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி உணவு உற்பத்தியில் முழுமூச்சுடன் ஈடுபடுமாறு தமிழ் மக்களைக் கேட்டுள்ளது. இவ்வேண்டுகோளுக்குச் செவிசாய்க்க வேண்டியது நமது கடமை.

இன்றைய சூழ்நிலையில், இந்த இலக்கை அடைவதில் விவசாயிகள் பல இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

கிழக்கோடு ஒப்பிடுங்கயில், வடக்கே ஒரு விவசாயி நல்கும் உடல் உழைப்பு மிக மிக அதிகம் என்றே கூற வேண்டும்.

நீரே அவனுடைய முக்கிய பிரச்சினை. கால்நூற்றாண்டுக்கும் மேலாக நீரிறைக்கும் யந்திரங்களைப் பயன்படுத்திவந்தமையால், துலாவும் பட்டையும் தூரப் போய்விட்டன. சூத்திரங்கள் காட்சிப் பொருளாக வைப்பதற்கும் இல்லாது அழிந்து விட்டன. துலாவால் இறைப்பதற்கு, குறைந்த பட்சம் மூவர் தேவை. பழைய அமைப்பில் ஒரே கிணற்றைப் பயன்படுத்துவோர் உறவினராக, நல்ல அயலவராக இருப்பர். 'சுற்றத்துக்கு அழகு சூழ இருத்தல்' என நம்பிய தலைமுறை அது! அந்த வாழ்க்கை முறையே அடியோடு மாறிவிட்ட நிலையில், எல்லா விவசாயிகளாலும் பழைய நீர்ப்பாசன முறைக்குத் திரும்ப முடியாது.

மாட்டுழவைப்பொறுத்த வரையிலும் இது போன்ற சிக்கல் உண்டு. ஊருக்கு ஓரிருவரிடமே மாடும் கலப்பையும் உண்டு. எவ்வளவு முயன்றாலும் முழுநிலப் பரப்பையும் உழுவது சிரமமே.

கூலிக்கு ஆளை அமர்த்துவது தவிர்க்க முடியாததாகிறது. ஆனால் வாழ்க்கைச் செலவு உயர உயர, கூலியும் உயர்ந்து விட்டது. ஆக, விவசாயம் பெரிய முதலீட்டை வேண்டி நிற்கிறது.

ஆனால் உணவுப் பஞ்சத்தில் அடியுண்டு போன நம் விவசாயிகளிடம் தற்பொழுது பணம் இல்லை. இதுவே பெரிய தடைக்கல். இந்தத் தடைகளைக் கண்டு, சோர்ந்து வாளா இருக்க வேண்டும் என்று நாம் சொல்லவில்லை. கமக்காரர்களே எமக்கு உணவு போடப் போகிறார்கள். அவர்களுக்கு உதவ நாம் என்ன செய்யலாம்?

இரண்டு சில்லு உழவு யந்திரங்கள் இன்னமும் எம்மிடம் இருக்கின்றன. அவற்றை இயக்கப் போதுமான டீசல் பெறுவது முடியாத காரியமல்ல. கூட்டுறவு அடிப்படையில் கமக்காரர்களுடைய தோட்டங்களை உழுது தர வேண்டும். நீர் இறைக்கும் இயந்திரங்களை வாடகைக்குத்தரலாம். விதைகளை நியாய விலையில் சிரமமின்றி பெற வழிசெய்து உதவலாம்.

விவசாயிகளும் தமது விளைபொருளைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்க வேண்டும் தரகர்களையும் பதுக்கல் காரர்களையும் இல்லாதொழித்தால் விலையைக் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தலாம்.

அரசாங்கம் தரும் நிவாரணத்தை நம்பி வாழும் நிலைமையை மாற்றவும் இந்தச் சோதனையில் தேறவும் நாம் எல்லோரும் ஒருங்குசேர்ந்து சிந்தித்துச் செயற்படுவோமாக!

## உங்களுடையதா?

மூளாயை சேர்ந்த கணபதி நித்தியானந்தம் என்பவருடைய தேசிய ஆளடையாள அட்டை, பிரயாண அனுமதி அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆசிரிய பீடத்தில் அலுவலக நேரத்தில் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். (கி)

## வித்தியாரம்பம்

கல்வியங்காட்டில் ஆலாலசுந்தரம் மண்டபத்தில் 29-ம் திகதி விஜயதசமி அன்று தமிழ்த்தாய் மன்றத்தினரால் வித்தியாரம்பம் செய்துவைக்கப்படவுள்ளது. (கி)

## இந்த நேரத்தில் இப்படியொரு ...

குடாநாட்டின் சில பகுதிகளிலுள்ள தபாலக ஊழியர்கள் கப்பல் மூலம் வந்த தபால்களைப் பட்டுவாடா செய்ய ஊரடங்கு தடையாக உள்ளதாம்.

இதே வேளையில் குடாநாட்டின் பல பகுதிகளிலும் சந்தைகள் கூடுகிறது. கப்பலில் இருந்து பொருட்கள் இறக்கப்படுகின்றன. தூர இடங்களுக்கு பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. வர்த்தக நிலையங்கள் வியாபாரம் செய்கின்றன.

சில அலுவலகங்களும் இயங்குகின்றன. உள்ளூர் வெளியூர் அவசர தபால்களை இப்பகுதி மக்கள் எதிர்பார்த்து வருகின்ற வேளையில் தபாலகங்களில் தபால் பொதிகள் தேங்கிக் கிடக்கின்றனவாம். (38கி)

## கப்பல் மூலம் யாழ். வந்தனர்

குவைத்தில் இருந்து ஜோர்தான் வழியாக விமானம் மூலம் அழைத்து வரப்பட்ட சில யாழ்ப்பாணத்து இளைஞர்கள் கொழும்பில் இருந்து கடந்த 20-ம் திகதி புறப்பட்ட கப்பல் ஒன்றின் மூலம் மன்னாரை வந்தடைந்தனர்.

அவர்கள் பின்னர் சங்குப்பிட்டி வழியாக நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் வந்தடைந்தனர். இவர்களில் பலர் குவைத்துக்கு போய் 4 மாதங்கள்தான் ஆகின்றனவாம். (ப-30 கி)

## தபால் அதிபர்கள் கூட்டம்

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல தபால் அதிபர்களையும் மானிப்பாயில் தற்காலிகமாக இயங்கும் கணக்காளர் பிரிவில் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்குச் சமுகமளிக்குமாறு வடமாகாண தபால் அத்தியட்சகர் எஸ். எம். சேதுகாவலர் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு தபாலதிபர்களும் தமது அலுவலகத்திற்குத் தேவையான முத்திரை வகைகளின் தொகை, பணத் தேவை விபரங்கள் ஆகியவற்றைக்கொண்டு வருவதன் மூலம் இவற்றைக் கொழும்பில் இருந்து விரைவாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார் (66-கி)

## இடம் பெயர்ந்தோர் கவனத்திற்கு

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்தவர்களுக்கான இலவச கஷ்ட நிவாரணம் ஈச்சமோட்டை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை 25 மூலம் வழங்கப்படுகிறது.

இதுவரை நிவாரணப் 'பெர்மிட்டு'களை பெற்றுக் கொள்ளாதவர்களும், இடம் பெயர்ந்தவர்களும் கிராம சேவர்களிடம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (16 கி)

### இது ஒரு கவிதா விவாதம்!

## கறுப்புச்சந்தையிலிருந்து ஒரு குரல்!

கடந்த 20.9.90 முரசொலியில் கவிஞர் சோ. பா எழுதிய 'கறுப்புச் சந்தைக் காரர்களே!' வெளிவந்தது. அக்கவிதையைப் பாராட்டிப் பலரும் எழுதியிருந்தார்கள்.

அந்தப் பாட்டுக்கு எதிர்ப் பாட்டொன்று எழுதியிருக்கிறார் கவிஞர் 'கடையேன்' - ''பிரசுரிப்பீர்களா?'' என்ற கேள்வியுடன்.

வாசகர் சிந்தனையைத் தூண்டும் எந்தக் கருத்தும் நிச்சயம் முரசொலியின் வரவேற்பைப் பெறும். அந்த வகையில் 'நினைத்துப் பாருங்கள் கவிஞர்களே! என்ற குரலிலும் நியாயம் இருக்கலாம்.

வாசகர் வசதிக்காகக் 'கறுப்புச் சந்தை'க் கவிதையை மறு பிரசுரம் செய்து, எதிர்ப்பாட்டையும் இங்கே தருகிறோம்.

வாசகர்களே, கறுப்புச்சந்தை சார்பாகவோ, வெள்ளைச் சந்தை சார்பாகவோ உங்களுக்கென்று ஒரு கருத்திருக்கும் அல்லவா?

அதைக் கவிதையாக எழுதி அனுப்புங்களேன்!

● ● ●

## கறுப்புச் சந்தைக் காரர்களே!

கறுப்புச் சந்தைக் காரர்களே!—நல்ல
காற்றடிக்குது தூற்றுங்களே
பொறுப்பில்லாத அரசாங்கம்—எம்மைப்
போட்டடிக்குது பாருங்களே!

—கறுப்புச்சந்தைக் காரர்களே!

சீனி விற்கிறீர் அரிசி விற்கிறீர்
தெயிலை விற்கிறீர் பொயிலை விற்கிறீர்
ஏணி வைப்பினும் எட்டொணாவிலை
ஏற்றி எங்களைச் சாகடிக்கிறீர்!

—கறுப்புச் சந்தைக் காரர்களே!

விளக்கு வைக்கமண் ணெண்ணெய் இன்றி என்
வீடிருட்டிலே மூழ்க, வீதியில்
முழத்தினுக்கொரு கடை விரித்தொரு
போத்தல் விற்கிறீர்; ''நூறு, ஐம்பது!''

—கறுப்புச் சந்தைக் காரர்களே!

உள்ளி விற்கிறீர், மல்லி விற்கிறீர்,
உயர்[illegible]வர்க்காரம் விற்கிறீர்!
கொள்ளி வைக்க[illegible]றகி லாதஇக்
கொடிய மண்ணில் உம் கொடிபறக்குது!

—கறுப்புச் சந்தைக் காரர்களே!

குண்[illegible]ஷெல்களுக்(கு) அஞ்சி ஓடலாம்!
கொடிய வெஞ்சிறைப் பட்டு மீளலாம்!
உங்கள் கைகளில் எங்கள் வாழ்க்கையா?
உய்ய வேறொரு மார்க்கம் இல்லையா?

—கறுப்புச் சந்தைக் காரர்களே,
காற்றடிக்குது தூற்றுங்களே!

-- சோ. ப

● ● ●

### எதிர்ப் பாட்டு:

## நினைத்துப் பாருங்கள் கவிஞர்களே!

காற்றடிக்கிற வேளையிலே நாங்கள்
கறுப்புச் சந்தையில் பிழைக்கவில்லை;
நேற்றிருந்தஎம் பிழைப்பெலாம் போச்சுதே
நினைத்துப் பாருங்கள் கவிஞர்களே!

(காற்)

முழத்திற்கொரு கடைவிரிப்பதும்
மூச்சுததிணறவே சயிக்கில் ஓடலும்
பிழைப்புக் காகவே! பசிக்கு(து) ஐயனே!
பேதைகள் எங்களைப் பேசிப்பழிப்பதா?

(காற்)

குண்டு ஷெல்களுக்(கு) அஞ்சி அஞ்சியே
கொண்டு வந்துநாம் கொடுக்கிறோம்!
சென்று வருவதில் சிரமம் எத்தனை?
சிந்தியாததேன்? புலவர்களே!

(காற்)

உங்கள் பாட்டிலே பாட்டுப் பாடுநீர்
எங்கள் பாட்டைநீர் எண்ணிப்பாருமே!
இங்குள்ளோரைநாம் எந்தவேளையும்
எத்திப் பிழைப்பதெம் எண்ணமோ!

(காற்)

பொறுப்பிலாதஇவ் அரசை நாளையே
புலிகள் நிச்சயம் நொருக்குவார்!
அறுப்பிலாமலே பொருட்கள் வாங்கலாம்
அலுப்பு வேண்டாமே அறிஞரே!

-- 'கடையேன்'

நவராத்திரிச் சிந்தனை - 9

## உழைப்பாளிகள் தெய்வம்

கவிவாணர் நாவிலும் சிற்பம், சித்திரம், சங்கீதம், முதலிய அழகுக் கலைகள் வல்ல கலைஞர்கள் கைகளிலும் கலைவாணி மகிழ்ந்து உறைகிறாள். கலைஞர்களுக்கு மட்டுமல்ல, உழைப்பாளிகளுக்கும் அவள் வழிபடு தெய்வமே. வயலை உழுகின்ற கமக்காரனுடைய வலிய கைகளிலும் அவளே இருக்கிறாள்.

''நாடிப்புலங்கள் உழுவார் கரமும்,
நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும்,
செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும்,
உவந்து நடம்
ஆடிக் களிக்கும் மயில்''
அவள் என்பார் கவிமணி.

மகாகவி பாரதியோ உழவர்களை மட்டுமன்றி, தொழிலாளர்களை - உழைப்பாளிகளை- சிறப்பாகக் குறிப்பிடுவான். 'கைவருந்தி உழைப்பவர் தெய்வம்' என்று போற்றுகிறான் கவிஞன் போருக்குரிய கருவிகளைச் செய்யும் கொல்லர், சிற்பியர், தச்சர் எல்லோர்க்கும் சரஸ்வதி குலதெய்வம் ஆவாள்.
இந்த வரிசைக்குள் மராத வணிகர், வேதியர், வீரர்கள் ஆகியோரும் தஞ்சமென வணங்குவது கலைமகளையே:

''வெஞ்சமர்க் குயி ராகிய கொல்லர்,
வித்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்,
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீரமன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்''

## கொடி பறக்குது கோட்டையில்!

கொடி பறக்குது கோட்டையில்,
கொடி பறக்குது கோட்டையில்!
அடிமை என்றதொர் பழி ஒழிந்தது —
கொடி பறக்குது கோட்டையில்!

கொடி பறக்குது கோட்டையில்,
கொடி பறக்குது கோட்டையில்!
எதிரிகள் படை கதி கலங்கிட,
கொடி பறக்குது கோட்டையில்!

புலி புகுந்தது கோட்டையுள்! —வெம்
புலி புகுந்தது கோட்டையுள்!
நிலை குலைந்தநம் பகைவர் அஞ்சினர்!
புலி புகுந்தது கோட்டையுள்!

கொடி பறக்குது கோட்டையில்,
கொடி பறக்குது கோட்டையில்!
விடுதலைப் புலிப் படை உயர்த்திய
கொடி பறக்குது கோட்டையில்!

தலை நிமிர்ந்தது தமிழினம்,
தலை நிமிர்ந்தது தமிழினம்!
அழிவு செய்பகை தொலைதல் கண்டதும்
தலை நிமிர்ந்தது தமிழினம்!

— ப. அறிவுடைநம்பி

### ராணுவம்...

கோட்டையில் புலிக்கொடி பறக்கிறது. திலீபனின் கனவை. கற்பனையை, தாகத்தை வீர விடுதலைப் புலி வீரர்கள் நனவாக்கி விட்டனர், முந்நூற்றி எழுபது வருடங்களுக்கு மேலாக எம்மைப் பிணைத்திருந்த அடிமைச் சங்கிலியின் ஒரு துண்டு இன்று உடைந்து விழுந்தது. அந்நிய ஆதிக்கத்தின் அவமானச் சின்னம் இன்று அழிந்துமுடிந்தது.

நேற்று இரவு 12 00 மணி தொடக்கம் திலீபனின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளான இன்று எப்படியும் அவன் கனவை நனவாக்கியே தீருவோம் என்று உறுதிமொழி எடுத்த விடுதலைப் புலிகளின் உக்கிரமான தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத ஸ்ரீ லங்கா இராணுவம் முற்றாகவே கோட்டையை விட்டு வெளியேறி ஓடியுள்ளது. இன்று காலை சரியாகப் 10.48 மணிக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் திலீபன் மரணித்த அதே நேரத்தில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி திரு. பானு அவர்கள் கோட்டையிலே புலிக் கொடியை ஏற்றி வைத்தார். திலீபனின் கனவுகளில் ஒன்றை நிறைவேற்றிவைத்துள்ளார். (73ஶ்ரீ

### 370 வருடங்களின்...

அசோக் ஹோட்டல், மணிக்கூட்டு வீதி வரை செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கண்ணி வெடிகள், மிதி வெடிகள அகற்றும் பணியில் போராளிகள் ஈடுபட்டதால் எவரும் கோட்டை வரை செல்ல அனுமதிக்கப்படவில்லை.

ஆயிரக்கணக்கான மக்கள் கோட்டையில் புலிக் கொடி ஏற்றப்பட்டிருந்ததை அசோக் ஹோட்டலின் முன்பாக நின்று பார்த்துக்கொண்டிருந்தனர். வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் இச் சம்பவத்தைப் படம் எடுத்தனர்.

இதேவேளை கோட்டை உட் பகுதியில் இருந்து பிணவாடை வீசிக்கொண்டிருக்கிறது.

கோட்டைக்குள் இருந்த தமிழ்ப் பொலிஸாரின் நிலைமை பற்றி எதுவித தகவலும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவம் வெளியேறியதையடுத்து நேற்றுக்காலை 6 மணிக்கு விமான மூலம் கோட்டைக்குள் குண்டுகள் போடப்பட்டன. உள்ளிருந்து தீச்சுவாலை தெரிந்தது. (66 33 ரூ)

## கனடாவில் உண்ணாவிரதம்

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிரந்தர அமைதியும் சமாதானமும் வேண்டி கனடா தமிழர் அன்னையர்முன்னணி ரொறன்ரோ நகரில் செப்டம்பர் முதலாம் திகதி ஒரு நாள் உண்ணாவிரதமும் பிரார்த்தனையும் நடத்தியது.

இந்த முழுநாள் உண்ணாவிரதத்தில் பல பெண்களும் பங்கு கொண்டனர். ஆண்களும், குழந்தைகளுமாக இரு நூறு பேர் பங்கு கொண்டனர்

உண்ணாவிரதம் நடைபெற்ற தேவாலயத்தின் வளவு முழுவதிலும் ஆங்கிலத்திலும், தமிழிலும் 50க்கு அதிகமான பதாதைகள் தமிழர் பிரச்சினைகளை விளக்கும் விதத்தில் நிறுவப்பட்டிருந்தன.

தமிழர் தேசிய மன்றத் தலைவர் திரு. என். சிவலிங்கம் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துவைத்தார்.

மனித உரிமைகள் அமைப்புப் பிரமுகரும் சட்டத்தரணியுமான ராகுல், டாக்டர் நிர்மலா, கனடாவில் தமிழர் சேவைகளுடன் சம்பந்தப்பட்டவர்களான திருவாளர்கள் ஞானதேவதாஸன், எஸ். சிற்றம்பலம், எஸ். திருச்செல்வம், செல்வி ஆனந்தி அருளானந்தம் ஆகியோரும் உண்ணாவிரத இறுதியில் உரையாற்றினார்கள்.

திருமதி ஜனனி சிவா நன்றி கூறினார். பெருமளவு கனடியர்கள் இங்கு வருகைதந்த போது அவர்களுக்கு விரிவான விளக்கம் கொடுக்கப்பட்டதும், அவர்கள் தங்கள் தார்மீகஆதரவைத் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது. 11-ரூ

### திலீபனின்...

வழியாக மண்டைதீவுக்குச் சமீபமாக உள்ள சிறுத்தீவிற்கு இராணுவத்தினர் தப்பி ஓடினர்.

அங்கு வைத்தும் தாக்குதலுக்குட்படுத்தப்பட்டு காலை 5. 30 மணியளவில் அனைத்துப் படையினரும் மண்டைதீவிற்கு விரட்டப்பட்டனர்.

இந்தக் கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கின்றதோ அன்றுதான் எமது சுதந்திர விடிவின் ஆரம்பம் என்ற தியாகி திலீபனின் கூற்று அவனது 3வது நினைவு நாளன்று நிறைவேறிவிட்டது என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. து

### இறுதித்...

மண்டைதீவு ராணுவம் பின் வாங்கியது. எனினும் கோட்டையை நோக்கியதான புலிகளின் கடும் ஷெல் தாக்குதல் அதிகாலை வரை தொடர்ந்தது.

கனரக ஷெல்களினால் கோட்டையின் ஒரு பக்கச் சுவர் தீப்பற்றிக்கொண்டது. இதனால் கோட்டையில் இருந்த இராணுவத்தினர் கோட்டையின் கழிவு வாய்க்கால் ஊடாக தென்புறமாக வெளியேறினர்.

வெளியே வந்த ராணுவத்தினர் பண்ணை தாம்போதியின் கரையோரமாக அதிகாலையில் மண்டைதீவை நோக்கிச் சென்றனர். இவர்கள் மண்டைதீவை அடைந்ததும் அங்கிருந்து நகரை நோக்கி ஷெல் தாக்குதல் இடம்பெற்றது. 73-து

### வெடிக்காத...

முற்றத்தில் விழுந்து வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டது.

இக்குண்டு வீசப்பட்ட நேரத்தில் 24 பேர் இந்த வீட்டில் ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர். 71-ரு

### இரவு...

ரோறா சேவிஸ் நிலையம், ராஜசூரியர் பெற்றோல் நிலையம், ஆஸ்பத்திரி என்பன சேதமடைந்தன.

பாஷையூர் குருநகர் பகுதிகளிலும் இவை விழுந்து வெடித்தன. 68ரு)

### ராணுவம் அனுப்பிய..

அனுப்பியது எனினும் இடைநடுவில் புலிகள் வழி மறித்து வாகனங்களைத்திருப்பி அனுப்பி வைத்தார்கள்.

வவுனியா நகரிலிருந்து யாழ். வீதியில் அரைமைல் தொலைவில் புலிகளின் தடை முகாம் உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. 11கி

## கொமாண்டோ மேஜர் பலி
## ஆளும் கட்சிக்குள் சர்ச்சை

கடந்த ஜூன்மாதம் 13-ம் 14-ம் திகதிகளில் மூதூர் கட்டைப்பறிச்சானில் தரையிறங்க முற்பட்ட இராணுவ கொமாண்டோக்கள் மீது விடுதலைப்புலிகள் தொடுத்த பெரும் தாக்குதல் தற்பொழுது ஆளும்கட்சி அரசியல் பிரமுகர்களிடையே பெரும் சர்ச்சையையேற்படுத்தியுள்ளது.

இலங்கை கடற்படையின் எஸ். எல். என் கந்துல என்ற தரையிறங்கு போர்க்கப்பலில் இருந்து 100 கொமாண்டோக்கள் ஆனிமாதம் 14-ம்திகதி கட்டைப்பறிச்சானில் தரையிறக்கப்பட்டனர்.

இவை அணைத்தும் கடற்படை அதிகாரி லெப். கொமாண்டர் லக்ஸ்மன் இலங்கக்கோனின் ஆணைக்குட்பட்டிருந்தன.

தரையிறங்கிய கொமாண்டோக்களுக்கு கொமாண்டோ மேஜர் ஏ. எம். அஸாட் தலைமை தாங்கினார்.

புலிகள் மிகச் சாதுர்யமாகத் தாக்குதலைத் தொடுத்தபோது 60 கொமாண்டோக்கள் கொல்லப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தற்பொழுது ஏற்றுக்கொள்கின்றன.

புலிகளின் தாக்குதலில் மேஜர் அஸாட் கொல்லப்பட்டார். இவர் முன்னாள் அமைச்சர் பாக்கீர் மார்க்காரின் புதல்வியின் காதலன். விரைவில் அவரை திருமணம் செய்யவிருந்தவர்.

இதுதவிர இந்த மோதலில் முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்காவின் நம்பிக்கைக்குரிய மெய்க்காவலர்களாக 1987 ஆம் ஆண்டில் கடமையாற்றிய கொமாண்டோ லெப்ரினன்ட் அனில் விமலசூரியவும், கொமாண்டோ லெப்ரினன்ட் மகிந்த ராஜபக்சவும் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அரசியல் பின்னணியைக் கொண்ட இராணுவ அதிகாரிகள் இத்தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளதினால் ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் இத்தாக்குதலில் அரசு திட்டமிட்டுச் செயற்படவில்லை என்று கண்டனம் செய்துள்ளனர்.

இதனால் ஆளும்கட்சியினரிடையே புதிய கருத்து வேறுபாடுகளையும், சந்தேகங்களையும் இச்சம்பவம் தற்பொழுது தோற்றுவித்துள்ளதாம். (கி)

### யாழ். கோட்டை...

கோட்டையாகும்.

1795 செப்ரெம்பர் 23, இக் கோட்டை ஆங்கிலேயர் வசமாகி திருத்தி அமைக்கப்பட்டது.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் இக் கோட்டையில்ஒரு பகுதி சிறைக்கூடமாக விளங்கியது மறுபகுதியில் உயரதிகாரிகள் தங்கும் இடமாக உபயோகிக்கப்பட்டது.

### காலக் கண்ணோட்டம்

1971 மார்ச் 14, றோகண விஜய வீர என்ற (ஜே.வி.பி) புரட்சியாளர் இங்கு சிறை கைக்கப்பட்டார், 1971ஏப்ரல் 5-ம் திகதி நள்ளிரவு 11.30 மணிக்கு றோகண விஜயவீர கோட்டைச் சிறையை உடைத்து தப்பியோட எடுத்த முயற்சி தோல்வி கண்டது.

1977 இல் யாழ்ப்பாணத்தில் போராட்டங்கள் நிகழத் தொடங்கின பாதுகாப்புப் படையினரும் பொலிஸ் பிரிவு உயரதிகாரிகளும் கோட்டையைத் தமது வதிவிடமாகக் கொள்ளத் தொடங்கினர். ஈழப் போராட்டத்தில் ஆரம்ப கர்த்தாக்களாக விளங்கிய 42 இளைஞர்கள் இங்குதான் விசாரிக்கபபட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

1984 யூலை 10, யாழ். கோட்டை ஈழத்தமிழ் போராளிகளினால் முற்றுகையிடப்பட்டது இந்த முற்றுகைக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி கிட்டு தலைமை தாங்கினார் 1987 ஒகஸ்ட் 3, இந்திய அமைதிகாக்கும் படை யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பிரவேசிக்கும் வரை இந்த முற்றுகை தொடர்ந்து இருந்தது சரியாக மூன்று ஆண்டுகள் 23 நாட்கள் இந்த முற்றுகை நடந்தது யாழ்ப்பாணக் கோட்டை வரலாற்றில் மிக நீண்டகால முற்றுகை இதுவே இது கோட்டையின் மூன்றாவது முற்றுகை ஆகும்.

இக் கால கட்டத்தில் கோட்டைக்குள் இருந்த ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் வெளியே வர முயலும் வேளைகளில் பயங்கரமாக வெளியிலிருந்து தாக்கப்பட்டு அவர்கள் கோட்டைக்குள் முடக்கி வைக்கப்பட்டனர் அதனால் இராணுவத்தினர் கோட்டைக்குள் இருந்து ஷெல் தாக்குதல்களையும் வெகுதூரம் பாய்கின்ற ஆட்லறி ஷெல் தாக்குதல்களையும் மேற் கொண்டு வந்தனர்.

1687-ம் ஆண்டு ஆரம்பத்தில் ஷெல் தாக்குதலோடு பொம்மர் விமானமும், ஹெலிகொப்டரர்களும் யாழ்ப்பாணத்தை அழிப்பதில் ஈடுபட்டன.

ஒப்பறேசன் பூமாலை (இந்திய அரசினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்நை) முடிவுற யூலை 29, 1987 இல் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானது. ஒகஸ்டு 3 ஆம் திகதி விடுதலைப் புலிகள் அனுமதியுடன் இந்தியப்படை யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பிரவேசித்தது. இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு வெளியேறியதும் ஸ்ரீலங்கா ராணுவம் கோட்டைக்குள் பிரவேசித்தது.

1990 ஆம் ஆண்டு யூன் 11 ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்குமான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து மீண்டும் அன்றில் இருந்து இக் கோட்டை விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டது.

106 நாட்களாக நடாத்தப்பட்ட இந்த முற்றுகைக் காலங்களில் இரு தரப்பினருக்கும் இடையில் கடும் தாக்குதல்கள் நடைபெற்றன. கோட்டை இராணுவத்தினருக்கு உதவியாக இக் காலப் பகுதியில் விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்களான 'மாசெற்றி' களும், அவ்ரோ விமானங்கள் (பொதிகள் போட) பாரிய விமானமான வை 12 ஆகியனவும் தாக்குதலில் ஈடுபட்டன. கடந்த 13-ம் திகதி புலிகளால் மாசெற்றி விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

செப்ரெம்பர் 26, 1990 இல் ஸ்ரீலங்கா அரச படையினர் கோட்டையை விட்டு வெளியேறினர். தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி பானு அவர்கள் களம் பல கண்ட கோட்டையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடியை ஏற்றி வைத்தார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 27-09-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.